www.tamilarangam.net

# தோழர் க.பத்மநாபா

இவர்

தேசத்தின் விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்தவர். ஈழமக்களோடும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோடும் தன்னை இணைத்துக்கொண்டவர். தனிநபர் பயங்கர வாதத்தையும், தலைமை வழிபாட்டையும் நிராகரித்து இடதுசாரிக் கொள்கைகளை சுவீ கரித்துக் கொண்டவர். ஆயுத விளையாட்டுக்களின் மத்தியிலே மக்களே எஜமானர்கள் – என்னும் புதிய கோசத்தை ஈழப்போராட்டத்தில் புகுத்தியவர். விரிந்த சர்வதேச பார் வையை கொண்டவர். எதிரிகளதும் துரோகிகளதும் துப்பாக்கிகள் இவரைத் தொடர்ந்த– போதும் கொண்ட கொள்கைகளிலிருந்து விலக மறுத்தவர். சந்தர்ப்பவாத அரசியலை வெ றுத்தவர். சகோதரப் படுகொலைகளை துணிந்து எதிர்த்தவர்.

அனைத்தையும் விட தோழர்.பத்பநாபா மக்களுக்கு ஒரு நல்ல தலைவர்தோழர் களுக்கு ஒரு நல்ல தோழர். மானுடத்தை நேசித்த ஒரு மகத்தான மனிதர்.

இந்த உன்னதமான தோழரை கொலை செய்ததன் மூலம் புலிகளின் இரத்த வெறிபிடித்த வரலாறு மீண்டும் அம்பலமாகியுள்ளது. கொலைவெறி பிடித்த மிருகங்களே – இவர்கள் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர். .போராட்டத்தைப் புரட்சிகரப்பாதைக்குஇட் டுச் செல்ல முயன்ற இந்த தோழரை கொன்றதன் மூலம் புலிகள் மீண்டும் போராட்டத்– தைப் பின் தள்ளிவிட்டனர்.

உயர்ந்த இலட்சியங்களுடனும் கண்ணிய நெறிகளுடனும், பாச உணர்வுகளுடனும் வாழ்ந்த தோழர். பத்மநாபாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஈடுசெய்ய முடியாத இவரது இழப்பால் அதிர்ந்து போய்விட்ட ஈழ மக்களுக்கு துன்பத்தால் தவிக்கும்தோ ழர்களுக்கும் மீளமுடியாததுய ரில் மூழ்கிவிட்ட குடும்பத்தின ருக்கு எமது அநுதாபத்தை யும் தெரிவிக்கிறோம்.



செயலாளர் நாயகம்
(ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி)

* பாசிஸ்டுகளுக்கு எதிராக தமது தாய்நாட்டின் விடுதலைக்காக போராடும் ஈழ மக் களுடன் விடுதலைக்காக குருதி சிந்திய போராளிகள் வாழ்கிறார்கள். எமது முன் நோக்கிய பாதைக்கு அவர்கள் ஒளியூட்டுகிறார்கள். –தோழர் பத்மநாபா

* நாங்கள் மக்கள் மத்தியில் தீவிரமாக அரசியல் வேலையில் ஈடுபட்டபோது தான் மார்க்சிஸ லெனினியத்தை அறிந்துகொண்டோம். அதைக் கற்றுக் கொண்டோம். தெளி வாக புரிந்தும் கொண்டோம்.
–தோழர் பத்மநாபா

* எமக்குப் பின்னால் புரட்சிகர முற்போக்கு சக்திகள் துணை நிற்பார்கள் என்ற நம்பிக் கையும் அனைத்துக்கும் மேலாக யாராலும் வெல்லமுடியாத எமது மக்களின் பலத்தி– லும் எமக்கு நம்பிக்கை உண்டு.
–தோழர் பந்மநாபா.

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி
(பிரான்சுப் பிரிவு)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்